# இந்தியா பௌண்டேசன் பார் தி ஆர்ட்ஸ் (ஐ.எ.ஃ.ப்.ஏ)

### தம் கலைப் பயில்வுத் திட்டத்தின்கீழ்

### கலைத்தளங்களுக்கான (Arts Platforms) விண்ணப்பங்களை வரவேற்கிறது

### விண்ணப்பிக்கக் கடைசி நாள்: ஆகஸ்ட் 31, 2026

கலைப் பயில்வுத் திட்டம் (Art Practice Programme) கலைஞர்கள் தங்களின் தற்போதைய பயில்வுகளின் வீச்சுக்களை, பரப்பெல்லைகளைப் புதிய நோக்கில் விரிவுபடுத்த உதவும் வேலைத்திட்டங்களைச் (projects) செயற்படுத்த முற்படுகின்றது. இவ்வேலைத்திட்டங்கள் மரபாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளைக் கேள்விக்குட்படுத்துவதாகவோ, வடிவம், உள்ளடக்கம், ஊடகம் போன்றவற்றில் புதிய எல்லைகளை நகர்த்தக்கூடியதாகவோ, வெளி, பார்வையாளர்கள், சமூகங்கள் ஆகியவற்றின்மீது கொண்ட ஈடுபாடுகளில் புதிய அணுகுமுறைகளைக் கண்டறியக்கூடியதாகவோ, சோதனை முயற்சிகளை வெளிப்படுத்தக்கூடியதாகவோ அமையலாம்.

**கலைத்தளங்கள் (Arts Platforms):**

கலைஞர்கள் என்ற வகையில், நமது கலைச்செயல்பாடுகள் மூலம் பிற கலைஞர்களுடன் சேர்ந்து செயல்படவும் நமக்குள் கூட்டுச்செயற்பாட்டை வளர்த்தெடுக்கவும் வேண்டிய தேவையை உணர்கிறோம். வட்டாரம், படைப்பாக்கம், தலைமுறை இடைவெளி போன்றவற்றைக் கடந்து கலைஞர்கள் ஒன்றிணையும்போது, நம் கலைச்செயல்பாடுகள் சார்ந்த கருத்துருவாக்கங்கள், உத்திகள் போன்றவற்றைக் குறித்து விவாதிக்கவும், புதுமைகளை உருவாக்கவும் மேம்படுத்தவும் நம்மிடையே ஒத்த குழுக்களையும் (peer groups), கூட்டமைப்புகளையும் (networks), குழுமங்களையும் போன்றவற்றை உருவாக்க உதவுகின்றது. அறிவுப் பரிமாற்றம், உரையாடல், விவாதம், கற்றல், கூட்டு வளர்ச்சி ஆகியவற்றிற்கான வெளிகளை உருவாக்குவதன்மூலம் **இத்தளங்கள்** கலைசார் ஆற்றல்களின் எதிர்பாராத சங்கமங்களுக்கான தளங்களாக (incubators) அமைகின்றன.

இக்கூட்டமைப்புகள் (networks) முற்போக்கான கலைஞர்கள் சமூக – அரசியல் நிகழ்வுகளுக்குச் சரியான முறையில் எதிர்வினையாற்றவும், கலைச்செயல்பாடுகளுக்கான நீடித்த கட்டமைப்புகளை உருவாக்கவும், மீள்தன்மைமிக்க கலைச்சமூகங்களைக் கட்டமைக்கவும் இதுவரை கேட்கப்படாத குரல்களைக் கேட்பதற்கான முக்கிய வெளிகளை உருவாக்கவும் உறுதுணையாய் அமைகின்றன. கலைச்செயல்பாடுகள் தொடர்பான வளங்களைச் சேகரிப்பதன்மூலமும் அவற்றிற்குக் கூட்டுரிமையை ஊக்கப்படுத்துவதன்மூலமும் **இக்கலைத்தளங்கள்** அனைவரையும் உள்ளடக்குதல், சூழலுக்கேற்ற வகையில் தகவமைத்துக்கொள்தல், நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றை முதன்மைப்படுத்தும் படைப்புச் சூழமைவுகளைச் செழுமைப்படுத்துகின்றன. இதன்மூலம் மாறிவரும்

சூழலுக்கேற்பக் கலைச்செயல்பாடுகள் எதிர்வினையாற்றிச் செயற்படுவதை உறுதிப்படுத்துகின்றன. இது புதுமை, ஒருமைப்பாடு, கலைகளில் கூட்டு முகாமையின் சக்தி ஆகியவற்றைக் கவனப்படுத்துகின்றது.

கலைப்பயில்வுத் திட்டத்தின்கீழ், இத்தகைய **கலைத்தளங்களுக்கான** வேலைத்திட்ட முன்வரைவுகளை (proposals) வரவேற்கின்றோம். அவை, கலைஞர்களிடையே உறவுப்பின்னல்களையும் வெளிகளையும் (நேரடி வெளி, இணைய வெளி, அல்லது இரண்டும் கலந்தவை) உருவாக்கி அவற்றிற்குத் தூண்டல்களாகவும் அமையக்கூடிய பயிலரங்குகள், கலைஞர் வதிவிடங்கள், கலைஞர்களின் கூடுகைகள் போன்றனவாக அமையலாம். இவ்வகை முன்னேற்பாடுகள் கலைஞர்களிடையே கருத்துப் பரிமாற்றம், கூட்டுச்செயற்பாட்டை வளர்த்தெடுத்தல், படைப்பாற்றலை ஊக்குவித்தல், நீடித்த கலைச்செயற்பாடுகளுக்கு உறுதுணையாய் இருத்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒரு பிரிவு அல்லது பல்வேறு பிரிவுகளைச் சேரந்த கலைஞர்களை ஒரு பொதுத்தளத்தில் ஒன்றிணைப்பதாய் அமைய வேண்டும்.

**திட்டத்தின் கால அளவு:**

12 மாதங்கள் வரை

**வரவு செலவுத் திட்ட அளவு**:

அதிகப்படியாக ரூபாய் 3,00,000 வரை

**யார் யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?**

ஒரு கலைப்புலம் சார்ந்தோ அல்லது பல்வேறு புலங்களின் ஊடாகவோ இயங்குகின்ற கலைஞர்களிடமிருந்து இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

- இசை, ஒலி, பனுவல், நடனம், உடலியக்கம், அரங்கம், பாவைக்கூத்து, கதைசொல்லல், மாயவித்தை (magic), சர்க்கஸ் (circus), இன்னும் பிற நிகழ்த்துக்கலைகள் சார்ந்த நிகழ்த்துக்கலைஞர்கள்.
- திரைப்படம் (அ-புனைவுப்படம் (non-fiction) மற்றும் புனைவுப்படம்), சலனச் சித்திரம் (animation), புகைப்படம், நிறுவல் கலை (installation), புது ஊடகக் கலை (new media), creative coding, செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், ஊடாட்டக்கலைகள், மின் ஊடக விளையாட்டு (gaming) / கருத்துருவக் கலை, ஓவியம், சிற்பம், அச்சுக் கோர்த்தல், சித்திரப்

புத்தகம், வரைகலைக் கதையாடல்கள், கலைஞர் புத்தகம் இன்னும் பிற காண்பியக் கலை வடிவங்கள் சார்ந்து இயங்கும் காண்பியக் கலைஞர்கள்.

- கலைக்காட்சிக் கூடங்களுக்கு வெளியே இயங்கும் எடுத்தாளுனர்கள் (curators)
- இலக்கியப்படைப்புகளுடன் இயங்கும் கவிஞர்கள், நாவலாசிரியர்கள், சிறு புனைவு எழுத்தாளர்கள், நாடக ஆசிரியர்கள், திரைப்பட வசன எழுத்தாளர்கள், சித்திரக்கதை ஆசிரியர்கள், மின்னணு ஊடக விளையாட்டு (game) எழுத்தாளர்கள், அ-புனைவு எழுத்தாளர்கள்
- பல்துறைப் படைப்பாக்கங்களில் ஈடுபட்டுள்ள கலைச்செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள்

**திட்ட முன்வரைவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்**

ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழிகளிலும் உங்களின் திட்ட முன்வரைவுகளை எழுதலாம். ஆங்கிலத்தை விட, பிற இந்திய மொழிகளில் திட்ட முன்வரைவுகளை எழுத ஐ.எ.்.ப்.ஏ ஊக்கப்படுத்துகின்றது.

உங்களின் திட்ட முன்வரைவுகளில்

- ஒரு கலைஞராக உங்களின் தற்போதைய கலைப்பயில்வு, அக்கறை, விருப்பங்கள்
- கலைத்தளத்தை வளர்த்தெடுப்பதில் தங்களுக்குள்ள முனைப்பும் உந்துசக்தியும்
- நீங்கள் ஒருங்கிணைக்கவிருக்கின்ற கலைத்தளம் குறித்த விபரங்கள், இக்கலைத்தளத்தினை நீங்கள் ஒருங்கிணைக்க விரும்புவதற்கான காரணம், உங்களுடன் சேர்ந்து செயலாற்ற இருக்கின்ற பிற பங்கேற்பாளர்கள், இந்த ஒருங்கிணைப்பு (அல்லது கூட்டிணைவு) ஒழுங்கமைக்கப்பட இருக்கின்ற இடம் / வெளி
- திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தெளிவான காலவரிசை விபரங்கள்
- விரிவான வரவுசெலவுத் திட்ட அறிக்கை,
- இவ்விண்ணப்பத்திற்குத் தேவையான உங்களின் முந்தைய படைப்புச் சான்றுகள்
- உங்களின் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியனவற்றை விளக்கி அனுப்புங்கள்.
- உங்களின் இறுதித் திட்ட முன்வரைவுகளை இணைய வழியாக ஒரே மின்னஞ்சலில், Project Proposal for Arts Platforms (Arts Practice) [கலைத்தளங்களுக்கான திட்ட முன்வரைவுகள் (கலைப்பயில்வு) என்ற தலைப்புடன், கலைப்பயில்வுத் திட்ட அலுவலரான ஜான் சேவியர்ஸ்க்கு, john@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில் அனுப்பி வைக்கவும்.
- உங்களின் திட்ட முன் வரைவுகள் தொடர்பான கேள்விகள், விளக்கங்கள் போன்றவற்றிற்கு john@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்.

**விண்ணப்பிப்பதற்கான தகுதி**

- இந்தியக் குடிமக்கள் மட்டுமே திட்ட முன்வரைவுகளை அனுப்பத் தகுதியுடையவர்கள். PIO எனப்படும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களோ (persons of Indian Origin), வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களோ (Overseas Citizenship of India cardholders) இதில் உள்ளடக்கப்படமாட்டார்கள்.
- விண்ணப்பிப்பவர்கள் கண்டிப்பாக பான் அட்டையும் (PAN card), அடையாளம் மற்றும் குடியுரிமைக்கான சான்றாதாரமாக இந்தியக் கடவுச்சீட்டு, ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை ஆகியவற்றில் ஏதாவதொன்றும் வைத்திருக்க வேண்டும்.
- தனிநபர்கள் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். எந்தவகை நிறுவனமும் அமைப்பும் விண்ணப்பிக்க இயலாது.
- முதன்மை விண்ணப்பதாரருடன் சேர்ந்து, இத்திட்டங்களில், உடனியங்க விரும்பும் பிற பங்கேற்பாளர்களும் இந்தியக் குடிமக்களாகவே இருக்க வேண்டும்.
- ஐ.எ.்.ப்.ஏ.வுடனான பொருளாதாரப் பரிவர்த்தனைகளில் முறைகேடுகள் இழைத்த வரலாறு கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
- ஐ.எ.்.ப்.ஏ.விடமிருந்து ஏற்கனவே நிதிநல்கை பெற்று, அத்திட்டம் தொடர்பாக அளிக்கை செய்ய ஒத்துக்கொண்டவற்றை அளிக்கத் தவறியவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
- ஐ.எ.்.ப்.ஏ. வழங்கும் வேலைத்திட்டங்களுக்கு எந்தக் காரணம் கொண்டும் எதிர்காலத்தில் விண்ணப்பிக்கக் கூடாது என ஐ.எ.்.ப்.ஏ.விடமிருந்து கடிதம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
- ஐ.எ.்.ப்.ஏ.வின் நிதிநல்கையால் செயல்படுத்தப்படும் ஏதேனும் ஒரு வேலைத்திட்டத்தில் தற்போது பணிபுரிபவர்கள் விண்ணப்பிக்க இயலாது.
- ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தங்களுக்கென வங்கியில் கூட்டுக் கணக்கு எண் வைத்திருக்க வேண்டும். அவ்வாறு கூட்டுக் கணக்கு இல்லையெனில், ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். மற்றவர்கள் உடனுழைப்பாளர்களாக, இணை பங்கேற்பாளர்களாகக் கருதப்படுவர்.

**தேர்வு செய்யப்படும் முறை**:

தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் புறத்தேர்வாளர் குழுவினரால் மதிப்பீடு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் இக்குழுவினரின் முன்னிலையில் தங்களின் வேலைத்திட்டம் குறித்த எண்ணங்களை அளிக்கை செய்ய வேண்டும்.

**தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துச் செயல்திட்டங்களும் ஐ.எ.்.ப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்**.

**முக்கிய தேதிகள்**

- திட்ட முன்வரைவுகள் குறித்த உங்களின் கேள்விகளுக்கும் எண்ண ஓட்டங்களுக்கும் ஐ.எ.ஃ.ப்.ஏ. அலுவலரின் விளக்கங்களைப் பெற, அவற்றை எழுத்து வடிவிலோ, ஒலி அல்லது காட்சி வடிவிலோ **ஆகஸ்ட் 21, 2026**க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.
- இறுதித் திட்ட முன்வரைவுகள் அனுப்பக் கடைசி நாள்: **ஆகஸ்ட் 31, 2026**
- தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் அறிவிக்கப்படுவது: **நவம்பர், 2026.**

**குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய வகையிலான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எ.ஃ.ப்.ஏ. உறுதிபூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.**